सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

# வரவு - செலவுத் திட்ட உரை

## 2021 - 2022

### திரு ந. ரங்கசாமி

**மாண்புமிகு முதலமைச்சர்**



பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபத்தின் வான்வழித் தோற்றம், புதுச்சேரி

**26 ஆகஸ்ட், 2021**

# வரவு – செலவுத் திட்ட உரை

# 2021 – 22

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. – குறள்

குற்றமற்றவனாகவும், குடிமக்களின் நலத்திற்குப் பாடுபடுபவனாகவும் இருப்பவனை உலகத்தார் தமது உறவினனாகக் கொண்டு, சூழ்ந்து இருப்பர்.

***மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களே !***

**நா**ன் பெருமை வாய்ந்த இந்த அவையில் 2021-22ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க உள்ளேன். 2021-22ஆம் ஆண்டிற்கான ஆண்டு நிதி நிலை அறிக்கை, மானியக் கோரிக்கைகள் மற்றும் விளக்க விவரக் குறிப்பு ஆகியவை வழங்கப்பட உள்ளன. புதியதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள பதினைந்தாவது சட்டமன்றத்தில் எனது முதல் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய புதுச்சேரி ஆட்சிப்பரப்பு மக்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். மேலும், சட்டப்பேரவைத் தேர்தலில் எனக்கு முழுமனதுடன் ஆதரவு நல்கிய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களுக்கும், அனைத்து தேசிய ஜனநாயகக் கூட்டணிக்

கட்சித் தலைவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எனது அரசு பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவும் தேர்தலின்போது எங்களால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றக் கடினமாகப் பாடுபடும் என்று இந்தத் தருணத்தில் உறுதியளிக்கிறேன். எனது அரசு, அனைத்து தரப்பு மக்களின் முன்னேற்றத்திற்கும், குறிப்பாக நலிவடைந்த பிரிவினரின் முன்னேற்றத்தின்மீது சிறப்பு கவனம் செலுத்தி அவர்களுக்காகத் தொடர்ந்து பாடுபடும் என மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் உறுதியளிக்கிறேன். இதைக் கருத்தில் கொண்டு நான் பதவியேற்றவுடன் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தில் கூடுதலாக 10,000 புதிய பயனாளிகளை சேர்த்தல், மற்றும் இத்திட்டத்தின் மூலம் ஓய்வூதியம் பெறும் அனைவருக்கும் ₹ 500 உயர்த்தி வழங்குதல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தியுள்ளேன்.

**2.** மேலும், கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த பிறப்பிக்கப்பட்ட பொதுமுடக்கத்தினால், ஏழைக் குடும்பங்களில் ஏற்பட்ட இன்னல்களைப் போக்குவதற்காக எனது அரசு அனைத்து குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கும் 3,000 ரூபாயை இரண்டு தவணைகளாக வழங்கியுள்ளது.

**3.** கொரோனா வைரஸ் நோய்த் தொற்றானது புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் பொருளாதாரத்தை பெருமளவில் பாதித்தது மட்டுமல்லாமல் பல உயிரிழப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். நோய்

பரவுதலின் தீவிரம் தற்போது குறைந்து வருவதை முன்னிட்டு, ஏழை மற்றும் நலிவடைந்த பிரிவினர் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படாதவண்ணம் ஊரடங்கில் பல தளர்வுகளை எனது அரசு அறிவித்துள்ளது. கொரோனா வைரஸுக்கு எதிரான போரில் பணியாற்றிய முன்களப்பணியாளர்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதோடு, தங்கள் இன்னுயிரை ஈந்த பணியாளர்களின் பெருமை போற்றப்பட வேண்டிய ஒன்று ஆகும் என்பதையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக இந்தப் பணியில் ஈடுபட்ட மருத்துவர்கள், செவிலியர்கள், ஆஷா பணியாளர்கள், காவல் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் ஏனையோர் அனைவரின் உழைப்பும் பாராட்டுதலுக்குரியது.

**4.** சட்டப்பேரவைத் தேர்தல் காரணமாக, இந்த நிதியாண்டில் ஐந்து மாதங்களுக்கு மட்டுமே அரசின் அன்றாட செலவினங்களுக்காக முன்னளி மானியம் சமர்ப்பிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். 2021-22ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ₹ 9,924.41 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், இவ்வாட்சிப்பரப்பின் சொந்த வருவாய் வரவினங்கள் ₹ 6,190 கோடியாகவும், மாநில பேரிடர் நிவாரண நிதியான ₹ 5 கோடியையும் சேர்த்து மத்திய அரசின் நிதி உதவி ₹ 1,729.77 கோடியாகவும் இருக்கும். மத்திய அரசுத் திட்டங்களின்கீழ் (Centrally Sponsored Schemes)

வழங்கும் நிதி ₹ 320.23 கோடியாக இருக்கும். மேலும், நிதிப் பற்றாக்குறையை சமாளிக்க ₹ 1,684.41 கோடியை வெளிச்சந்தை (OMB) மூலம் திரட்ட மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. ₹ 1,200.44 கோடி மூலதன செலவினங்களுக்காகவும் ₹ 8,723.97 கோடி வருவாய்ச் செலவினங்களுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் 31-3-2021 அன்று வரையிலுள்ள மொத்த நிலுவைக் கடன் தொகை ₹ 9,334.78 கோடியாகும். இது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 22.17 விழுக்காடு ஆகும். இவை பரிந்துரைக்கப்பட்ட நிதிநிலைக் குறியீட்டு வரம்புக்குள் உள்ளது. இந்திய அளவில் சராசரி உள்நாட்டு மொத்த வருவாய் (GDP) வளர்ச்சி விகிதம் சுமார் 7 முதல் 8 விழுக்காடாக உள்ள நிலையில் புதுச்சேரி மாநிலத்தின் சராசரி உள்நாட்டு மொத்த வருவாய் (GSDP) சுமார் 10 விழுக்காடு என்ற அளவில் வளர்ச்சி அடைந்துள்ளது.

**6.** கடந்த 2020-21ஆம் நிதி ஆண்டில் நமது செலவினம் ₹ 8,342.87 கோடியாகும். இது 2020-21ன் திருத்திய மதிப்பீட்டின்படி 92.70 விழுக்காடு ஆகும். கொரோனா வைரஸ் பரவல் மற்றும் மத்திய அரசுத் திட்டங்களின்கீழ் (CSS) வழங்கப்படும் நிதி மத்திய அரசிடம் இருந்து சில திட்டங்களுக்கு

கடந்த நிதி ஆண்டின் இறுதியில் பெறப்பட்டது போன்ற காரணங்களால் 64.13 விழுக்காடு மட்டுமே மத்திய அரசின் திட்டங்களில் செலவு செய்ய முடிந்தது. இருப்பினும், கடந்த நிதி ஆண்டில் மத்திய அரசுத் திட்டங்களின்கீழ் செலவிட முடியாத மீதமுள்ள தொகை அந்தந்த திட்டங்களின்கீழ் நடப்பாண்டில் செலவு செய்யப்படும்.

**7.** அரசின் நிதி ஆதாரங்களின் பெரும்பகுதி சம்பளம், ஓய்வூதியம், கடன் மற்றும் வட்டி செலுத்துதல் உள்ளிட்ட முக்கிய செலவினங்களுக்காகச் செலவிடப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். 2021-22ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான ₹ 9,924.41 கோடியில், ₹ 2,140 கோடி சம்பளங்களுக்கும் (21.56 விழுக்காடு), ₹ 1,050 கோடி ஓய்வூதியங்களுக்கும் (10.58 விழுக்காடு), ₹ 1,715 கோடி கடன் மற்றும் வட்டி செலுத்துவதற்காகவும் (17.28 விழுக்காடு), ₹ 1,591 கோடி மின்சாரம் வாங்குவதற்காகவும் (16.03 விழுக்காடு) ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசின் மற்ற முக்கிய செலவினங்களான முதியோர் ஓய்வூதியம் மற்றும் பிற நலத் திட்டங்களுக்கு ₹ 1,290 கோடியும் (13 விழுக்காடு), அரசு கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தன்னாட்சி உயர் கல்வி நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு மானியக் கொடையாக ₹ 1,243 கோடியும் (12.52 விழுக்காடு) ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**8.** இந்த முன்னுரையுடன், 2021-22ஆம் நிதியாண்டிற்கான துறைவாரியான மானியக் கோரிக்கைகளை நான் சமர்ப்பிக்கிறேன்.

**வேளாண் மற்றும் விவசாயிகள் நலம்**

**9.** கிராமப்புற மக்களின் வருமானத்திற்கு முக்கிய ஆதாரமாக விவசாயம் திகழ்கிறது. மேலும், அவர்களின் வருமானத்தை மேம்படுத்தி, வறுமையைக் குறைத்து, உணவுப் பாதுகாப்பிற்கு வழிவகுக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு எனது அரசு புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் விவசாய நலத்திட்டங்களை செயல்படுத்த முன்னுரிமை அளிக்கும்.

**10.** தற்போது பயிர் உற்பத்தி தொழில்நுட்ப திட்டம் [Crop Production Technology (CPT) Scheme] மூலமாக நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உற்பத்தி மானியம் ஏக்கருக்கு ₹ 5,000 தொடர்ந்து வழங்கப்படும். அதே சமயம் விவசாயிகளுக்கு தேவையான நெல் விதைகள் பொதுப்பிரிவினருக்கு ஒரு கிலோவிற்கு ₹ 10 வீதம் மற்றும் அட்டவணை இனத்தவருக்கு 75 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும். மேலும், உயிர் உரங்கள் மற்றும் உயிர் பூச்சிக்கொல்லிகள், வேப்பம்புண்ணாக்கு ஆகியவை பொதுப்பிரிவினருக்கு 75 விழுக்காடு மானியத்திலும் அட்டவணை இனத்தவருக்கு 100 விழுக்காடு மானியத்திலும் வழங்கப்படும். மாஹே பகுதியில் காய்கறி உற்பத்தி மற்றும்

விநியோகத்திற்காக இயக்க ரீதியிலான (Mission Mode Project) திட்டம், தோட்டக்கலை கூட்டுறவு சங்கம், ஆத்மா (ATMA) குழுக்கள் மற்றும் குடியிருப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் பங்களிப்புடன் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**11.** விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்க சாகுபடிக்குத் தேவையான வேளாண் உபகரணங்களான சில்பாலின், தார்பாய், கைத்தெளிப்பான், விசைத்தெளிப்பான், அசோலா வளர்ப்புப் பைகள் ஆகியவற்றை 50 விழுக்காடு மானிய விலையில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆடு, மாடு மற்றும் கோழி வளர்ப்பிற்கான கால்நடை தீவனத்திற்காக அசோலா உற்பத்தியை அதிகரித்திட சில்பாலின் அசோலா வளர்ப்பு பைகள் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

**12.** தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (RKVY) சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் விவசாய விளைபொருட்களை மதிப்புக் கூட்டல் செய்வதற்கு தொழில்நுட்ப மையம் (Incubation Centre) பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தில் அமைக்கப்படும். சிறு மற்றும் குறு கிராம உணவுப் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டல் தொழில்களை ஊக்குவிக்கும் விதத்தில் உணவு தானியங்கள், காய்கறிகள், பழங்கள் மற்றும் வேளாண் பொருட்களை

பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டல் செய்யும் தொழில்களில் ஈடுபட முன்வரும் தனிநபர் விவசாயி, கிராம மகளிர், சுய உதவிக் குழுக்கள் ஆகியோருக்கு 50 விழுக்காடு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**13.** விவசாயிகள் நிதி உதவி பெறுவதற்கும், விவசாய இடுபொருட்களின் கையிருப்பு மற்றும் வானிலை நிலவரங்கள் ஆகியவற்றை அறிவதற்கும் தாங்களே பதிவு செய்து கொண்டு பயன்படுத்தக்கூடிய வகையில் கைபேசி செயலி (Mobile App) ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

**14.** புதுச்சேரி கிழக்கு கடற்கரைச் சாலையில் புதிய இடத்தில் ஒரு நவீன வேளாண் விளைபொருட்கள் விற்பனை வளாகம் (e-NAM Mandi) அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இங்கு வேளாண் விளைபொருட்கள் சுலபமாகக் கொண்டு வருவதற்கும், கொண்டு செல்வதற்கும் தேவையான சாலை வசதிகள், ஏலக் கூடம், தானியக் கிடங்கு, தானியங்கி பணம் எடுக்கும் இயந்திர வசதியுடன் வங்கி, ஓய்வு அறைகள், மின்னனு எடை மேடைகள் மற்றும் e-NAM அலுவலக அறை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**15.** தற்போது வாடகை இடத்தில் இயங்கிவரும் கூனிச்சம்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை வேறு இடத்திற்கு மாற்றி அமைத்திட விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளதால், விவசாயிகளுக்கு

வசதியான இடத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மாற்றப்படும். பெருகிவரும் காய்கறிகள் தேவையைக் கருத்தில் கொண்டு விவசாயிகள் சாலையோரமாக அமைத்துள்ள காய்கறி அங்காடிகளை முறைப்படுத்தி அவர்களுக்கு உதவும் நோக்கில் புதிய உழவர் சந்தை வில்லியனூர் மற்றும் திருக்கனூரில் இந்த ஆண்டு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**16.** நிலத்தடி நீர் வளத்தை மேம்படுத்தும் வகையில் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பிராந்தியங்களில் புதுச்சேரி நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் (District Irrigation Scheme) தடுப்பணைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக "பிரதான் மந்திரி கிரிஷி சின்சாயி யோஜனா" (PMKSY) என்ற திட்டத்தின்கீழ் மத்திய அரசிடம் நிதி உதவி கோரப்படும்.

**17.** காரைக்கால் மாவட்டத்தில் கோடைப்பருவ மற்றும் குறுவை சாகுபடி செய்ய தற்பொழுது அமைந்துள்ள சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள் முக்கிய நீர் ஆதாரமாய் அமைந்துள்ளது. சுமார் 1,500 ஹெக்டேர் நிலம் இதனால் பாசன வசதி பெறுகிறது. சில கிணறுகள் பழுதடைந்து பயன்பாட்டில் இல்லாமலும் சில இடங்களில் புதிய ஆழ்குழாய்க் கிணறுகளின் தேவையும் உள்ளது. முக்கிய விளை நிலங்களில் தொடர்ந்து சாகுபடி செய்யும் விதத்தில் முதல் கட்டமாக ₹ 60 இலட்சம் செலவில் ஐந்து கிணறுகள் புதுப்பிக்கப்பட அல்லது புதியதாக நிறுவப்பட உள்ளன.

**18.** காரைக்கால் மாவட்டத்தில் விவசாய நிலங்களில் பரவலாக வளர்ந்துள்ள காட்டுக் கருவேல மரங்களை அகற்றி மீண்டும் விவசாயப் பயன்பாட்டிற்கு கொண்டுவர விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ₹ 10,000 என்ற அளவில் அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 2 ஹெக்டேர் வரை மானியம் வழங்கப்படும்.

**19.** காரைக்கால் மாவட்ட விவசாயிகள் நீர் ஆதாரங்களில் இருந்து பாசன நீரை தங்களது நிலங்களுக்குக் கொண்டு செல்லத் திறந்தவெளி வாய்க்கால்களையே பெரிதும் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் பாசன நீர் அதிக அளவில் வீணாகிறது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு அடர்த்தி குறைந்த பாலித்தீன் (LDPE) குழாய்கள் வாங்கி நீரைப் பாய்ச்ச பொதுப் பிரிவு விவசாயிகளுக்கு 70 விழுக்காடு மானியமும் இதர பிரிவு விவசாயிகளுக்கு 90 விழுக்காடு மானியமும் நபர் ஒன்றுக்கு ₹ 15,000க்கு மிகாமல் வழங்கப்படும். இத்திட்டம் நிலத்தடி நீர் செறிவூட்டல் பயன்பாடு மற்றும் நீர் சிக்கன திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**20.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 124.47 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வனம் மற்றும் வனவிலங்கு**

**21.** வனத்துறையானது மற்ற துறைகளின் ஒத்துழைப்புடன் நமது 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வகையில் 75,000 காட்டு மரக்கன்றுகள் சாலையோரங்களிலும், ஏரிக்கரையிலும், கல்வி நிலையங்களிலும், தொழிற்பேட்டையிலும் மற்றும் விளைநிலங்களிலும் நடப்பட்டன. விவசாயிகளுக்கு 10,000 தேக்கு, செம்மரம் மற்றும் சந்தன மரக்கன்றுகள் இலவசமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை நினைவு கூறும் வகையில் 75 போன்சாய் செடிகள், 75 மலர்ச் செடிகள் மற்றும் 75 கள்ளிச் செடிகள் கொண்ட நினைவுத் தோட்டம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பசுமை புதுச்சேரி திட்டத்தின் ஒரு முயற்சியாக இவ்வாட்சிப்பரப்பின் பல்வேறு பகுதிகளில் சுமார் 75 செங்குத்துத் தோட்டம் (Vertical Garden) அமைக்கப்படும். மணப்பட்டு வனப்பகுதியில் சாகச நடவடிக்கைகளுடன் வனத்தோட்டம் மற்றும் நீர்தேக்க அமைப்புகள் உருவாக்கப்படும். மத்திய அரசின் நிதி உதவியுடன், சில பள்ளிகள் அடையாளம் காணப்பட்டு அவற்றில் மரக்கன்று நாற்றங்கால் (Tree Nurseries) ஏற்படுத்தப்படும். மத்திய அரசுத் திட்ட நிதியின்கீழ் காரைக்கால் பகுதியில் ஒரு அலுவலகம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது மற்றும் மத்திய விலங்கியல் அமைப்பின் வழிகாட்டுதலின்படி, புதுச்சேரியில் 70-100 ஏக்கர் நிலப்பரப்பில் விலங்கியல் பூங்கா அமைக்கும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

## கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலம்

**22.** எனது அரசு, இவ்வாட்சிப்பரப்பில் கால்நடை மற்றும் கோழிகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும்பொருட்டு கால்நடைகளின் நலனைப் பேணுதல், உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் மற்றும் தொழில் முனைவோரை உருவாக்குதல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கும்.

**23.** கறவைப் பசுக்கள் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், சிறந்த மரபணுக்கள் கொண்ட கலப்பின கிடேரிக் கன்றுகளை உருவாக்க 70,000 செயற்கை முறை கருவூட்டல்கள் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 20,000 சிறந்த மரபணுக்கள் கொண்ட கன்றுகளை 2021-22ஆம் ஆண்டில் நாம் பெற இயலும். மேலும், “இன்றைய கன்று நாளைய பசு” என்ற கருத்தின் அடிப்படையில் விவசாயிகளை கிடேரிக் கன்றுகளை வளர்க்க ஊக்குவிக்கும் பொருட்டு கன்று ஊர்வலங்கள் (Calf Rallies) அந்தந்த கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடைக் கிளை நிலையங்கள் மூலம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆரோக்கியமான கிடேரிக் கன்றுகளை வளர்ப்போருக்கு பணப்பரிசுகள் வழங்கப்படும்.

**24.** சிறந்த மரபணு கொண்ட கலப்பின கிடேரிக் கன்றுகளை உருவாக்க குஜராத்தில் உள்ள சபர்மதி ஆஸ்ரம (தேசிய பால்வள மேம்பாட்டு நிறுவனம்) கோசாலையிலிருந்து

உறை விந்து வாங்கப்பட்டுள்ளது. சாஹிவால் (உள்நாட்டு இனம்) விந்து இனப்பெருக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**25.** உள்ளூர் ஆடுகளை மேம்படுத்தி உற்பத்தியைப் பெருக்க, சிறந்த மலபார் ஆடுகளின் விந்து செயற்கைக் கருவூட்டல் செய்வதற்காக கால்நடைக் கிளை நிலையங்களுக்கு வழங்கப்படும். புறக்கடைக் கோழி வளர்ப்பினை ஊக்குவிக்கும்பொருட்டு, இருவித பயன்பாடுகள் கொண்ட 1,000 கிரிராஜா கோழிகள் அரசு கோழிப்பண்ணையில் வளர்க்கப்பட்டு 50 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும். கறவை மாடுகள் மற்றும் கலப்பினக் கன்றுகளை பராமரிக்கும் செலவினை குறைக்கவும், பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கிலும் கூட்டுறவு பால் உற்பத்தி சங்கங்களில் உறுப்பினர் அல்லாத விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியத்தில் கால்நடைத் தீவனம் வழங்கும் திட்டம் நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தப்படும். சிறப்புக் கால்நடை மற்றும் இனப்பெருக்க (SLBP) திட்டத்தின்கீழ் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் அடுத்த தலைமுறை கறவைப் பசுக்களை உருவாக்குவதற்காக, கலப்பின கிடேரிக் கன்றுகளுக்கு 75 விழுக்காடு மானிய விலையில் சமச்சீர் கலவை கன்றுத் தீவனம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**26.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பு பால் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் பொருட்டு எனது அரசு பின்வரும் திட்டங்களை செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

(i) ஆர்வமுள்ள பொதுப்பிரிவு மற்றும் அட்டவணைப் பிரிவு பயனாளிகளுக்கு முறையே 25 மற்றும் 33 விழுக்காடு மானியத்தில் 4,000 கறவைப் பசுக்கள் வழங்கப்படும்;

(ii) கால்நடைகளின் இனப்பெருக்கம் மற்றும் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்கப் பகுதி வாரியான தாது உப்புக் கலவை (Area Specific Mineral Mixture) அனைத்து கறவைப் பசுக்களுக்கும் வழங்கப்படும்;

(iii) காமதேனு பாதுகாப்பு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், நாள் ஒன்றுக்கு 12 லிட்டர் மற்றும் அதற்குமேல் பால் தரக்கூடிய உயர்ரக கறவைப்பசுக்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்ரக கிடேரிக் கன்றுகள் உருவாக்கப்படும்;

(iv) பால் உற்பத்தியைக் கணிசமான அளவில் அதிகரிக்க பெண் கன்றுகளை மட்டுமே உருவாக்கும் பொருட்டு "இனம் பிரிக்கப்பட்ட உறைவிந்து தொழில் நுட்பம்" அறிமுகப்படுத்தப்படும்;

(v) ஆர்வமுள்ள கால்நடை விவசாயிகளுக்கு, வெள்ளாடு / செம்மறி ஆடு மற்றும் கோழிப் பண்ணைகள் அமைக்க இரண்டு முதல் ஏழு நாட்கள் வரை ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் கால்நடைத் துறையில்

உள்ள திறன்மிக்கவர்களின் (Experts) மூலம் இணைந்து தொழில்நுட்பதிறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும். மேலும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் நபார்டு (NABARD) மூலம் கடனுதவி பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்; மற்றும்

(vi) நடமாடும் கால்நடை மருந்தகங்களை செயல்படுத்துவதற்காக, புதுச்சேரி பிராந்தியத்திற்கு இரண்டு மற்றும் காரைக்கால் பிராந்தியத்திற்கு ஒன்று என மூன்று ஆம்புலன்ஸ் வாகனங்கள் வாங்கப்படும்.

மேற்கண்ட நடவடிக்கைகளின் மூலமாக புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் பால் உற்பத்தியானது தற்போதுள்ள 1,22,000 லிட்டரிலிருந்து 1,75,600 லிட்டராக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**27.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 44.88 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்**

**28.** நேரடி பணப் பட்டுவாடா (DBT) மூலம் பயன்களைத் தகுதியுள்ள குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக பணமாக செலுத்தல்

நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் பாப்ஸ்கோ நடத்தும் நியாய விலைக் கடைகள் உட்பட அனைத்து நியாய விலைக் கடைகளும் முக்கியத்துவம் இழந்துள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். மேலும், நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதால், அதன் ஊழியர்கள் மிகவும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

**29.** மத்திய அரசின் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம், வெளிச் சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்த, அதனைக் கொள்முதல் செய்து விற்பனை செய்வதற்காக, “விலை கட்டுப்பாடு நிதி“ (Price Stabilisation Fund) ஒன்றை ஏற்படுத்தி, மாநில மற்றும் யூனியன் ஆட்சிப்பரப்பு அரசுகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வட்டி இல்லா முன்பணம் வழங்குகிறது. இந்த நிதி அமைப்புக்கு மத்திய அரசின் நிதிப் பங்களிப்புக்குச் சமமான பங்களிப்பை மாநில / யூனியன் ஆட்சிப்பரப்பு அரசுகள் வழங்கவேண்டும். நமது நிதி நிலைமையைப் பொருத்து இதற்கென மூலதன நிதி (Corpus Fund) ஒன்று உருவாக்கப்பட்டு, பருப்பு, எண்ணெய் மற்றும் தானிய வகைகளை நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு எடுக்கும். குடிமைப்பொருள் வழங்கல் துறை இத்திட்டத்தின் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அரசுக்கு விரைவில் அறிக்கையை சமர்ப்பிக்கும்.

**30.** இலவச அரிசி வழங்கும் திட்டத்திற்காக ₹ 197.50 கோடி இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கூட்டுறவு**

**31.** சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு கூட்டுறவு அமைப்புகள் முக்கிய பங்காற்றுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இது வறுமையைப் போக்குவதற்கும், நிதி உதவியைப் பெறுவதற்கும், நல்ல வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கும் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளிப்பது போன்றவற்றிலும் மிகப்பெரிய வாய்ப்பு அளிக்கிறது. எனது அரசு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யும். தீவிர நிதிப் பற்றாக்குறை இருக்கும் பட்சத்திலும், கூட்டுறவு நிறுவனங்களுக்கு நடப்பாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 10 விழுக்காடு நிதியை உயர்த்தி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வருவாயின் அளவைப் பொறுத்து திருத்திய மதிப்பீடு (R.E.) தயாரிக்கும் நேரத்தில் மேலும் நிதி ஒதுக்குவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

**32.** பாகூர் கொம்யூனில், பாலின் மதிப்புக் கூட்டப்பட்ட பொருளான பால்கோவாவை உற்பத்திச் செய்யும் ஆலை ஒன்றை ₹ 1.67 கோடி மதிப்பீட்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

காரைக்கால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மூலமாக பால் மற்றும் அதன் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை அதன் விற்பனை நிலையங்களுக்கு கொண்டு செல்வதற்கு குளிர்சாதன வண்டி ஒன்று ₹ 12 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்படும். மேலும், தற்போது அங்குள்ள ஆய்வகம் மேம்படுத்தப்படும். பாண்லே பால் பொருட்கள் தயாரிக்கும் பிரிவு ₹ 2.50 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்படும்.

**33.** புதுச்சேரி கூட்டுறவு சர்க்கரை ஆலை தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, வேலை நாட்களுக்கான ஊதியம், மற்றும் தொழிலாளர் வைப்பு நிதி நிலுவைத்தொகைக்காக எனது அரசு ₹ 40 கோடியை இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்துள்ளது. ஆலையைத் தொடர்ந்து நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

**34.** பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின்கீழ் வீடு கட்டும் பயனாளிகளுக்கு மணல் விற்பனை செய்வதற்காக எனது அரசு மணமேடு கிராமத்திலுள்ள மணல் குவாரியை உபயோகப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**35.** கிராமப்புற மக்களுக்கு டிஜிட்டல் கல்வியறிவு (Digital literacy) சென்றடையும் பொருட்டு தானியங்கி பணப் பட்டுவாடா சேவையை விரிவுபடுத்த புதுச்சேரி மாநிலக் கூட்டுறவு வங்கி மூலம் நடமாடும் வாகனம் ஒன்று வாங்கப்பட்டுள்ளது.

**36.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 69.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிக்கல்வி**

**37.** குழந்தைகளின் அறிவாற்றலைப் பெருக்குவதற்கு பள்ளிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது மறுக்கமுடியாத ஒன்றாகும். பள்ளிகள் மாணவர்களின் இள மனதில் ஆர்வத்தை விதைத்து, நல்ல மனிதர்களாகத் திகழத் தேவையான கருவிகளாக செயல்படவேண்டும். எனது அரசு அனைவருக்கும் குறிப்பாக நலிந்த பிரிவினருக்கு இலவச மற்றும் தரமான கல்வியை வழங்கிட உறுதி பூண்டுள்ளது. மேலும், புதுச்சேரி ஆட்சிப்பரப்பை 100 விழுக்காடு கல்வி அறிவு பெற்ற மாநிலமாக மாற்றுவதற்கும் எனது அரசு உறுதி பூண்டுள்ளது.

**38.** எதிர்பாராத விதமாக, கொரோனா வைரஸின் தாக்கத்தினால் அனைத்துப் பள்ளிகளும் செயல்பட இயலவில்லை. எனினும், தற்பொழுது நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பள்ளிகளை மிக விரைவில் திறக்க அரசு முடிவெடுத்துள்ளது. கல்வியறிவின்மையை அறவே ஒழிக்கும் பொருட்டும் மற்றும் மாணவர்களின் இடைநிற்றலைத் தவிர்க்கும் நோக்கத்திலும் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் நலத்திட்டங்களான இலவச பாடப் புத்தகங்கள், நோட்டுப்

புத்தகங்கள், சீருடை, சிற்றுண்டி, மதிய உணவு, ஒரு ரூபாய் சலுகைக் கட்டணத்தில் பேருந்து வசதி, கல்வி உதவித்தொகை முதலிய நலத் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மாணவர்கள் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்காக, பாடவாரியான ஊக்குவிப்புப் பயிற்சிகள் மற்றும் நீட் (NEET) தேர்வுக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

**39.** இந்தக் கல்வி ஆண்டில், ஐந்து பள்ளிகள் தனியார் பள்ளிகளுக்கு நிகராக அனைத்து வசதிகளுடன் கூடிய மாதிரிப் பள்ளிகளாக (Model Schools) தரம் உயர்த்தப்படும். மாணவ சமுதாயத்தினருக்குத் தோட்டம் அமைக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி, தூய்மையான சுற்றுப்புறம் குறித்த விழிப்புணர்வை உருவாக்கும் விதமாக, நடப்பு நிதியாண்டில் சுமார் 7,500 மரக்கன்றுகளை பள்ளி வளாகங்களில் நடும் பணி நடைபெற்று வருகிறது. பள்ளிகளில் சுகாதாரமான கழிப்பறைகள் மற்றும் நல்ல குடிநீர் வசதிகளை மேம்படுத்தி பள்ளிக் கட்டடங்களைச் சிறந்த முறையில் பராமரிக்க எனது அரசு முக்கியத்துவம் அளிக்கும். ஆசிரியர்களின் பற்றாக்குறையை தீர்க்கும் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

**40.** ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் படிக்கும் மற்றும் எண்ணறிவுத் திறனை மேம்படுத்த, மத்திய அரசுத் திட்டத்தின் வழிகாட்டுதலுக்கிணங்க

எண்ணறிவு பற்றிய அடிப்படை கல்வியறிவு திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் ₹ 2.40 கோடி செலவில் 100 பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (Smart Classrooms) நிறுவப்பட உள்ளன. இந்த ஆண்டில் ₹ 51.57 இலட்சம் செலவில் பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் தற்காப்புப் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பள்ளிகள் கொரோனா நோய்த்தொற்றினால் மூடப்பட்டதன் காரணமாக மாணவர்களுக்குக் கற்றலில் ஏற்பட்ட இடைவெளியை சமன் செய்யும் பொருட்டு கற்பித்தல் நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபட பயிற்சி ஏடு வழங்கப்படும். தகவல் மற்றும் மின்னணு தொழில்நுட்பங்களின் மூலம் பள்ளிகளை மேம்படுத்த ₹ 1.10 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**41.** நடப்பு நிதியாண்டில் பள்ளிக்கல்விக்காக ₹ 742.81 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி**

**42.** நல்ல சமுதாயம் அமைவதற்கு மிக முக்கியமான ஆதாரங்களில் ஒன்றாகக் கல்வி திகழ்கிறது. பொதுவாக உயர் கல்வி கற்றவர்கள் சமுதாயத்தில் சிறந்த வாய்ப்புகளைப் பெறுவதோடு மட்டுமல்லாமல் சிறந்த வாழ்க்கைத் தரமும்

உடையவர்களாக இருக்கிறார்கள். இதனைக் கருத்தில் கொண்டு, எனது அரசு இவ்வாட்சிப்பரப்பில் உயர் கல்வியின் வளர்ச்சியில் தொடர்ந்து கவனம் செலுத்தும்.

**43.** பெருந்தலைவர் காமராஜர் மாணவர் கல்வி நிதி உதவித் திட்டத்தின்கீழ் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி தொடர்ந்து வழங்கப்படும். இதற்காக, எனது அரசு 2021-22ல் ₹ 40 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்மூலம் 9,214 மாணவர்கள் பயன்பெறுவர். ₹ 334.30 கோடி மதிப்பீட்டில் தேசியத் திட்டமிடுகை மற்றும் கட்டிட கலைப் பள்ளி ஒன்றை புதுச்சேரி மாநிலத்தில் (National School of Planning & Architecture) நிறுவுவதற்காக விரிவான திட்ட அறிக்கை இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஏனாம் பகுதியில் புதிய அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பது உட்பட மத்திய அரசின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த மத்திய அரசின் உயர்கல்வி திட்டத்திற்கான (RUSA) மாநிலப் பங்காக (State Share) ₹ 20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 7வது மத்திய ஊதியக்குழு பரிந்துரையை அரசு பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnics / PIPMATE) அமுல்படுத்தவும் மற்றும் பணி உயர்வுகளுக்காகவும் ₹ 7 கோடி

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு விழிப்புணர்வை மேம்படுத்தி வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பொருட்டு தொழில் நோக்குநிலை அமைப்பு ஒன்று (Career Orientation Cell) உருவாக்கப்படும்.

**44.** நடப்பு நிதியாண்டில் உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்விக்காக ₹ 296.62 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மின்விசை**

**45.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் மின் பற்றாக்குறை என்ற நிலை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். மேலும், எனது அரசு இவ்வாட்சிப்பரப்பின் அனைத்து பகுதிகளுக்கும் 24 மணி நேரமும் தடையின்றி மின்சாரம் கிடைப்பதை உறுதிசெய்யும். மின் செலுத்துதல் மற்றும் விநியோகித்தலை மேம்படுத்தி மின் செலுத்துதலில் ஏற்படும் இழப்புகளைக் குறைக்க பல மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 30 மெகாவாட் திறன்கொண்ட மேற்கூரை சூரிய மின் உற்பத்தி பேனல்கள் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு நிறுவும் மின் திட்டம், 40 விழுக்காடு மத்திய நிதி உதவியுடன் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும். புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி அமைச்சகத்தின் (MNRE) இரண்டாம் கட்டத் திட்டத்தில் (Phase II) புதிய சூரிய மின்சார இணைப்பிற்கான விண்ணப்பப் படிவத்தை இணைய வழி வாயிலாக பரிசீலிக்கவும் 3 கிலோவாட் வரை மின்

உற்பத்திக்கு 40 விழுக்காடு மானியமும், 3 கிலோவாட் முதல் 10 கிலோ வாட் வரையிலான மின் உற்பத்திக்கு 20 விழுக்காடு மானியமும் இணைய வழி மூலம் வழங்க செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 30 மெகாவாட் சூரிய மின்சாரம் 2022க்குள் உற்பத்தி செய்யப்படும்.

**46.** வில்லியனூர், காலாப்பட்டு, திருபுவனை மற்றும் கோர்க்காடு துணை மின் நிலையங்களில் உள்ள ஐந்து 10/16 MVA மின் மாற்றிகளின் திறனை ₹ 2.03 கோடி செலவில் 25 MVA திறனுடையதாக மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**47.** தேத்தாம்பாக்கம் 110/22 KV துணை மின் நிலையத்தில் பழுதடைந்த 10 MVA திறனுடைய மின் மாற்றி மாற்றியமைக்கப்பட்டு செயல்பாட்டிற்கு விரைவில் கொண்டு வரப்படும்.

**48.** பொலிவுறு நகரத் (Smart City) திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் மின் திட்டங்களும் மின் விநியோகத்தை மேம்படுத்த வழிவகுக்கின்றன. இதன்படி ₹ 10.22 கோடி செலவில் பெரிய கால்வாய் (Grand Canal) வழித்தடத்தில் உள்ள 11 KV எண்ணெய் வகை மின்மாற்றிகள் மற்றும் மின்சாதன பெட்டிகள் 26 குறு மின் நிலையங்களாக மாற்றியமைக்கப்படும். மேலும், அதனைச் சார்ந்த புதைவட மின்பாதைகள் நடப்பாண்டில் அமைக்கப்படும். வாணரப்பேட்டை,

தேங்காய்த்திட்டு பகுதிகளில் ₹ 8.55 கோடி செலவில் 22 KV மேல்நிலை மின்னூட்டிகளை 11 KV புதை வட மின்னூட்டிகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**49.** 22 KV மேல்நிலை மின்னூட்டிகளை 11 KV புதைவட மின்னூட்டிகளாக மாற்றும் பணியின் அங்கமாக சின்னவாய்க்கால் தெருவின் ஒரு பகுதி, வம்பாகீரப்பாளையம், வாணரப்பேட்டை, டாக்டர் அம்பேத்கர் சாலை, கடலூர் சாலையின் ஒரு பகுதி மற்றும் தேங்காய்த்திட்டு பகுதிகளில் 11 KV மின் உபகரணங்கள், மின்மாற்றிகள் மற்றும் குறைந்த அழுத்த மின்சாதனப் பெட்டிகள் ₹ 10.10 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**50.** மரப்பாலத்தில் தற்பொழுதுள்ள காற்றுக் காப்பு துணைமின் நிலையம் (Air Insulated Sub-station) சுமார் 25 வருடங்களுக்கு முன்பாக நிறுவப்பட்டது. இத்துணைமின் நிலையத்தின் செயல்திறன் ஆயுள் முழுவதுமாக நிறைவடைந்ததன் காரணமாக நவீன தொழில்நுட்பமான புதிய வாயு காப்பு துணைமின் நிலையம் (Gas Insulated Sub-station) ₹ 26.25 கோடி செலவில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்துணைமின் நிலையம் அமைப்பதன் மூலம் நிலையான மற்றும் தரமான மின்சாரம் மின் நுகர்வோருக்கு கிடைக்கும்.

**51.** இந்திய அரசின் வழிகாட்டுதலின்படி, பட்டியலிடல் (Billing) மற்றும் வசூல் திறனை அதிகரிக்க முன்பணம் செலுத்தக்கூடிய ஸ்மார்ட் மின் அளவிகளை (Smart Meters) அறிமுகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் தற்பொழுதுள்ள 33,870 தெரு மின் விளக்குகளை LED தெரு மின் விளக்குகளாக மாற்றுவதற்கு நவீன கணினி மூலம் இயக்குதல் மற்றும் நிர்வகிக்கும் முறை (Computerised Command and Management System), நடைமுறைப்படுத்தப்படும். ஏழு வருடத்திற்கு சேமிப்பில் இருந்து பணம் செலுத்துதல் என்ற முறையில் (ESCO) தெரு மின் விளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளப்படும்.

**52.** மூலதன உள்கட்டமைப்புத் திட்டங்களின்கீழ், ₹ 10 கோடி செலவில் வெவ்வேறு திறனுடைய 50 பகிர்ந்தளிக்கும் மின்மாற்றிகள் தரம் உயர்த்தப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட உள்ளன. மேலும், 15 கிலோமீட்டர் அளவுக்கு உயர் மின்அழுத்தப் பாதைகளும், 50 கிலோமீட்டர் அளவிற்கு குறைந்த மின்அழுத்தப் பாதைகளும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மற்றும் 5 கிலோமீட்டர் அளவுக்கு உயர்மின் அழுத்தப் பாதைகளை மேம்படுத்தவும், 15 கிலோமீட்டர் அளவிற்கு குறைந்த மின்அழுத்தப் பாதைகளை மேம்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, 10 தொழிற்சாலைகளுக்கு உயர் மின்அழுத்த இணைப்புகளும், 50 தொழிற்சாலைகளுக்கு குறைந்த மின்அழுத்த

இணைப்புகளும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 40 விவசாய பம்ப் செட்டுகளுக்கும், 10,000 வீடுகளுக்கும், 1,500 வர்த்தக நிறுவனங்களுக்கும், 250 புதிய தெரு விளக்குகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட உள்ளன. 5 கிலோமீட்டர் தூரம் அளவிற்கு உயர் மற்றும் குறைந்த மின் அழுத்த புதை மின்வடங்களை புதிதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், 50 குறைந்த மின் அழுத்த மேல்நிலை இணைப்புகளை புதை மின்வடங்களாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தீயணைப்பு**

**53.** தீயணைப்புத்துறை பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப் போதுமான பயிற்சியாளர்களைக் கொண்டு நிரந்தரப் பயிற்சி மையம் ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தவளக்குப்பம், கரையாம்புத்தூர், லிங்காரெட்டிப்பாளையம் மற்றும் திருமலைராயன்பட்டினம் ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன. மேலும், வில்லியனூர், மடுகரை, சுரக்குடி, மாஹே மற்றும் ஏனாம் பகுதியில் உள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு நுரையூர்தி (Foam Tenders) வாகனங்கள் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அனைத்து தீயணைப்பு நிலையங்களுக்கும் Wireless கருவி, கணினி முதலியன நடப்பாண்டில் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேவையான புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டு சிறப்புப் பேரிடர் மீட்புக் குழு அமைக்கப்படும். தற்பொழுது பழுதடைந்த நிலையில்

உள்ள தீயணைப்பு வாகனங்களை மாற்றி அதற்குப் பதிலாக புதிய 12 தீயணைப்பு வாகனங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**54.** புதுச்சேரி தீயணைப்புத் துறை தலைமை அலுவலகம் மற்றும் புதுச்சேரி தீயணைப்பு நிலையம் அமைப்பதற்கான பணிகள் துரிதப்படுத்தப்படும். பாகூர் தீயணைப்பு நிலையம் இந்த ஆண்டு புதிய கட்டடத்தில் இயங்கும்.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலம்**

**55.** மீன்வளத் துறையானது உணவுப் பாதுகாப்பு மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குதல் ஆகியவற்றில் முக்கிய பங்காற்றுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். மீனவர்களின் நலனுக்காக ஏற்கனவே நடைமுறையில் பல நலத்திட்டங்கள் உள்ளன. அவை தொடர்ந்து திறம்பட செயல்படுத்தப்படும். பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கலன்களுக்கு அளிக்கப்பட்டுவரும் டீசல் கொள்முதல் அளவுகளைத் தங்கு கடல் மீன்பிடி முறையைக் கடைபிடிக்கும் அதிவேக மீன்பிடி படகுகளுக்கு அனுமதிக்கக்கூடிய டீசலை ஆண்டுக்கு 40,000 லிட்டரிலிருந்து 45,000 லிட்டராகவும், தினசரி மீன்பிடிமுறை மரம்/இரும்பு விசைப்படகுகளுக்கு ஆண்டுக்கு 36,000 லிட்டரிலிருந்து 40,000 லிட்டராகவும் உயர்த்தி வழங்க

உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதுபோல, வெளிப்புறம் மோட்டார் பொருத்திய கண்ணாடி நுண்ணிழைப் பிளாஸ்டிக் படகு / கட்டுமரங்கள்/வல்லம்/நாவா/மர நாவா ஆகிய படகுகளுக்கு ஆண்டுக்கு 6,000 லிட்டரிலிருந்து 7,000 லிட்டராகவும், வெளிப்புறம் மோட்டார் பொருத்திய பாரம்பரிய கட்டுமரங்களுக்கு ஆண்டுக்கு 4,000 லிட்டரிலிருந்து 5,000 லிட்டராகவும் உயர்த்தி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீன்பிடித் தடைக்காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் தடைக்கால நிவாரணத்தை உயர்த்தி வழங்கப் பரிசீலிக்கப்படும்.

**56.** மீனவர்கள் எவரேனும் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது இறக்க நேரிட்டால், அவர்களின் வாரிசுகளுக்கு உடனடி இறப்பு நிவாரணம் ₹ 5 இலட்சம் வழங்கப்படும். மாதந்தோறும் 8,268 மீனவர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் (i) 50 வயது முதல் 59 வயது வரை உள்ளவர்களுக்கு ₹ 2,500ஆகவும்; (ii) 60 வயது முதல் 79 வயது வரை உள்ளவர்களுக்கு ₹ 3,000ஆகவும்; (iii) 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோருக்கு ₹ 4,000ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

**57.** 300 மீனவப் பயனாளிகளுக்கு வலைகளுடன் கூடிய இயந்திரம் பொருத்தாத கண்ணாடி நுண்ணிழைப் படகுகள் வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியத் தொகையாக ₹ 16,500 வழங்கப்படும்.

**58.** மீன்பிடித் தடைக்காலங்களில் 454 இரும்பு/ மரவிசைப்படகு உரிமையாளர்களுக்கு ஆண்டுதோறும் தற்போது வழங்கப்படும் பராமரிப்புச் செலவுத் தொகை ₹ 20,000லிருந்து ₹ 30,000ஆகவும், கண்ணாடி நுண்ணிழைப் பிளாஸ்டிக் படகுகளுக்கு ₹ 10,000லிருந்து ₹ 20,000ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இதற்காக மொத்த செலவீனம் ₹ 1.50 கோடியாகும். பதிவு செய்துள்ள விசைப்படகு உரிமையாளர்களுக்கு தங்களின் படகுக்குச் செலுத்தவேண்டிய காப்பீட்டுப் பிரிமியத் தொகையில் 90 விழுக்காடு மானியம் வழங்கப்படும். 240 குதிரைத் திறனுக்கு மிகாமல் 16 முதல் 24 மீட்டர் வரை நீளம் கொண்ட இயந்திரம் பொருத்திய மரம்/இரும்பு/கண்ணாடி நுண்ணிழைப் படகுகள் வாங்க 40 விழுக்காடு மானியமாக 24 இலட்சத்திற்கு மிகாமல் (ஒன்றின் விலை ₹ 60 இலட்சம்) வழங்க ஏற்பாடு செய்யப்படும். இந்த நிதியாண்டில் இத்திட்டத்தின் மூலம் 8 மீனவர்கள் பயனடைவர். இதற்கான செலவு ₹ 1.92 கோடியாகும்.

**59.** மீன்பிடி சாதனங்கள் மானிய விலையில் வழங்கும் திட்டத்தின்கீழ், ஏற்கனவே வழங்கப்படுகின்ற மீன்பிடி உபகரணங்களான வலைகள், மிதவைகள், மூழ்கிகள், நைலான் கயிறுகள் போன்ற தேவையான உபகரணங்களை வாங்குவதற்கு அளிக்கப்படும் மானியத் தொகை நடப்பு நிதியாண்டு முதல் 50 விழுக்காட்டிலிருந்து 60 விழுக்காடாக உயர்த்தி வழங்கப்படும்.

**60.** பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் நல்ல மதிப்பெண் பெறும் 600 மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ / மாணவியருக்கு முறையே ₹ 5,000லிருந்து ₹ 7,000ஆகவும் மற்றும் ₹ 7,000லிருந்து ₹ 15,000ஆகவும் ரொக்கப் பரிசுத் தொகை உயர்த்தி வழங்கப்படும். இக்கல்வி ஆண்டிலிருந்து, குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் 75 விழுக்காட்டிலிருந்து 70 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

**61.** தேசிய தகவலியல் மையத்தின் (NIC) தொழில்நுட்ப உதவியுடன் மீன்வளத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் உரிய நேரத்தில் பயன்பாட்டிற்கு வருவதற்கும் மற்றும் பயனாளிகள் திட்டங்கள் பற்றிய விவரங்களை எளிதில் அறிந்து கொள்வதற்கும் Database உருவாக்கப்படும். ஒரு கிராமத்திற்கு ₹ 5 இலட்சம் வீதம் ₹ 75 இலட்சம் மதிப்பீட்டில் புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பிராந்தியத்தில் உள்ள 15 மீனவ கிராமங்களில் தகவல் அறியும் மையங்கள் (Information Knowledge Centre) உருவாக்கப்படும். மீனவ சமுதாய மாணவர்கள் தங்கள் திறனை மேம்படுத்தி போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் வகையில் மீனவளத் துறையின் நூலகம் ₹ 15 இலட்சம் மதிப்பீட்டில் கணினி மயமாக்கப்படும். காரைக்கால் பகுதியில் ₹ 15 இலட்சம் மதிப்பீட்டில்

மீன்காட்சியகம் அமைக்கப்படும். தமிழகத்தில் உள்ளதுபோல் புதுச்சேரி வைத்திகுப்பம் மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு ஏற்படுத்தப்படும்.

**62.** "பிரதம மந்திரி மத்ஸ்ய சம்பட யோஜனா" (PMMSY) திட்டத்தின்கீழ், பொதுப் பிரிவினருக்கு 40 விழுக்காடு மானியத்திலும் மகளிர் மற்றும் ஆதிதிராவிடர்களுக்கு 60 விழுக்காடு மானிய விலையிலும் (₹ 75,000 அலகு விலை) "குளிர்சாதனப் பெட்டியுடன் (Ice box) கூடிய இரண்டு சக்கர வாகனம்" வாங்குவதற்கு மத்திய அரசு மானியம் வழங்குகிறது. மீதமுள்ள முறையே 60 / 40 விழுக்காடு மானியத்தை புதுச்சேரி அரசு வழங்கும். இவைபோக எஞ்சிய தொகை தேவை இருப்பின் அவை பயனாளிகளைச் சாரும்.

**சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்**

**63.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க, அயராது பாடுபட்டுக்கொண்டிருக்கும் மருத்துவத் துறையைச் சார்ந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆரம்பத்திலிருந்தே கொரோனா நோய் மருத்துவத்துறைக்கே பெரும் சவாலாக உள்ளது. அரசு இயந்திரம் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் பணியில் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு

உறுப்பினர்கள் நன்கு அறிவர். முன்களப்பணியாளர்களின் தன்னலமற்ற சேவையால் நாம் இப்பணியில் கணிசமான வெற்றி அடைந்துள்ளோம். இந்த அவையின் சார்பாகவும் சுகாதாரப் பணியாளர்களுக்கு நான் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**64.** எனது அரசு எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவர்களுக்காக "புதுச்சேரி நோய் எதிர்ப்பு குறைபாடு வைரஸ் – (குறைகேட்பு மற்றும் சட்ட நடவடிக்கைகள்) விதிகள் 2020" என்ற விதிகளை உருவாக்க உத்தேசித்துள்ளது.

**65.** நமது புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் நான்கு பிராந்திய மக்கள் அனைவருக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கும் பொருட்டு அனைவருக்குமான முழு சுகாதார பாதுகாப்புத் திட்டத்தை (Universal Health Coverage Scheme) உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மருத்துவக்கல்லூரி, பல் மருத்துவக்கல்லூரி மற்றும் இதர மருத்துவ நிறுவனங்களில் காலியாக உள்ள பணியிடங்களை தேவைக்கேற்ப நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும். நிதித் தட்டுப்பாடு இருக்கும் பட்சத்திலும், அரசு மருத்துவக் கல்லூரிகள் / நிறுவனங்கள் நிதி நெருக்கடி இல்லாமல் சீராக செயல்பட, நடப்பாண்டு வரவு–செலவுத் திட்டத்தில் அவைகளுக்கு வழங்கும் உதவிக் கொடை (Grant-in-aid) 10 விழுக்காடு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

**66.** புதுச்சேரி கோரிமேடு பகுதியில் பல்வேறு தொற்று நோய் சிகிச்சைகளுக்காக 500 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனை அமைக்கப்படும்.

**67.** இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்ட மேற்படிப்பு நிறுவனத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு புதிய மருத்துவ உபகரணங்கள் வாங்கப்படும். மேலும், காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் ₹ 50 இலட்சம் செலவில் வெளிப்புறச் சிகிச்சை பிரிவு மற்றும் பதிவு மையம் அமைத்தல், மாஹே பள்ளூரில் ₹ 50 இலட்சம் செலவில் புதிய சமுதாய சுகாதார மையம் அமைத்தல் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் ஹட்கோ / நபார்டு வங்கி கடன் உதவியுடன் மேற்கொள்ளப்படும். கொரோனா சிகிச்சைக்காக 2021-22 வரவு-செலவுத் திட்டத்தில் கூடுதலாக ₹ 25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**68.** வில்லியனூர் மற்றும் ஏனாம் பகுதியில் புதியதாகக் கட்டப்படும் ஆயுஷ் மருத்துவமனைகளின் கட்டுமானப் பணிகள் இவ்வாண்டுக்குள் முடிவடைந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

**69.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 795.88 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**இந்து சமய நிறுவனங்கள்**

**70.** 12 வருடங்களுக்கு மேலாக குடமுழுக்கு நடைபெறாத திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது. அனைத்து கோயில்களின் கடவுள் உருவச் சிலைகள், தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்கள் மற்றும் இதர அசையும் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்கள் மின்னணு (டிஜிட்டல்) முறையில் பராமரிக்கப்பட்டு அவை பொதுமக்கள் பார்வைக்காக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். கோயில்களின் அசையாச் சொத்துக்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு கோயிலுக்கு சொந்தமான நிலம், வீடு மற்றும் வணிக நிறுவனங்களிடம் இருந்து நியாயமான வாடகைத் தொகையை வசூலித்து அதன்மூலம் திருக்கோயில்களின் வருவாயைப் பெருக்க உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும்.

**71.** இந்த வருடம் திருக்கோயில்களை சீரமைக்கும் பணியை மேற்கொள்ள ₹ 2.76 கோடி கொடை நிதி (Grants) வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், (i) ஜன்னத்துல் பிர்தௌஸ் பள்ளிவாசல், அரியாங்குப்பம்; (ii) முஹம்மதியா பள்ளிவாசல், பெண்கள் மதரஸா, நடுத்தெரு, சுல்தான்பேட்டை (iii) முஹம்மதியா பள்ளிவாசல், மக்தப் மதரஸா, பழைய மேட்டுத்தெரு, சுல்தான்பேட்டை ஆகியவற்றை புனரமைக்க நிதி உதவி அளிக்கப்படும். அன்னதானத் திட்டம் புதுச்சேரி ஸ்ரீ வேதபுரீஸ்வரர் ஸ்ரீ வரதராஜப்பெருமாள் திருக்கோயிலில் விரிவுபடுத்தப்படும்.

**72.** இந்து அறநிலையத்துறையின் நிர்வாகத்தின்கீழ் வராத திருக்கோயில்களின் புனரமைப்புப் பணிகள் மற்றும் குடமுழுக்கிற்காக வழங்கப்படும் நிதி உதவி ₹ 3.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

**தொழில்கள்**

**73.** தொழில்துறையானது பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பாகவும் மற்றும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளையும் உருவாக்குகிறது. புதிய தொழில் முனைவோருக்குச் சரியான நேரத்தில் எந்தவித சிரமும் இல்லாமல் தொழில் முதலீட்டுக்கு அனுமதி வழங்குவதன் மூலம் புதுச்சேரியை ஒரு விருப்பமான தொழில் முதலீட்டு இடமாக மாற்ற தொழில்துறை கடினமாக உழைத்து வருகிறது.

**74.** தொழில் முனைவோர் தங்கள் தொழில் நிறுவனங்களைத் தொடங்குவதற்காக, புதுச்சேரியில் சேதராப்பட்டு மற்றும் காரைக்காலில் போலகம் ஆகிய இடங்களில் பாண்டிச்சேரி தொழில் மேம்பாட்டு வளர்ச்சி மற்றும் முதலீட்டுக் கழகத்தால் (PIPDIC) புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தொழில் மனைகள் (Industrial Plots) இருக்கின்றன. புதிய தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் "தொழில் தொடங்க தொழில் முனைவோரை ஊக்குவித்தல் மற்றும் தொழில்களுக்கான நிதி உதவி" திட்டத்தின்கீழ் இத்துறை

மானியம் வழங்கி வருகிறது. மேலும், தொழில் முனைவோர் மற்றும் படித்த வேலையற்ற இளைஞர்கள் மற்றும் கைவினைஞர்கள் சுய தொழில் நிறுவனங்கள் அமைப்பதற்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

**75.** மாவட்டத் தொழில் மையம், வளர்ந்துவரும் தொழில்முனைவோர்களை ஊக்குவிப்பதற்கும் மற்றும் படித்த வேலையற்ற இளைஞர்களுக்குத் தொழிற்கூடங்கள் / மேம்பட்ட உயர் தொழில்நுட்பத்திறன் / கைவினைத் தொழில் / தென்னை நார் தொழில் ஆகியவற்றில் பயிற்சிகள் அளிப்பதிலும் முக்கிய பங்காற்றுகிறது. சுய வேலைவாய்ப்பு நிறுவனங்கள் அமைப்பதற்கு மத்திய அரசின் “பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்” (PMEGP) மற்றும் மாநில அரசின் “வேலைவாய்ப்பில்லாதவர்கள் சுய தொழில் தொடங்க ஊக்குவித்தல் திட்டம்” (MUPSES) ஆகிய திட்டங்களின்கீழ் மானியத்துடன் கூடிய நிதி உதவியையும் வழங்குகிறது. புதிய தொழில் தொடங்க, தொழில் முனைவோருக்குத் தேவையான அனுமதி மற்றும் உரிமம் வழங்குதல் ஆகிய அனைத்து உதவிகளும் தொழில் வழிகாட்டு பணியகம் (Industrial Guidance Bureau) மூலம் அளிக்கப்படுகின்றன.

**76.** “எளிதாக வணிகம் செய்தல்” என்ற திட்டத்தின்கீழ் (Ease of Doing Business) முழுமையான இணையவழி ஒற்றைச் சாளர அமைப்பை மேலும் எளிதாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் தொழில்கள் அமைப்பதற்கான

அனுமதி மற்றும் உரிமங்கள் எளிய முறையில் தாமதமின்றி வழங்குவதற்காக இந்த நிதி ஆண்டில் எளிதாக வணிகம் செய்தல் (சேவை வழங்குதல்) 2021 மசோதாவை அறிமுகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனது அரசு ஏற்றுமதியை ஊக்குவிக்க ஒவ்வொரு மாவட்டத்தையும் ஏற்றுமதி மையமாக மேம்படுத்த முடிவு செய்துள்ளது. ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்யத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும். இதற்காக பிரத்யேகமாக புதிய ஏற்றுமதி கொள்கை விரைவில் அறிவிக்கப்படும்.

**77.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பிற்கான “புதுமை மற்றும் புதியதாகத் தொழில் துவங்கு கொள்கை” ஒரு உகந்த கட்டமைப்பை உருவாக்குவதையும், ஆர்வமுள்ளவர்களுக்கு குறிப்பிட்ட கால அளவுக்குள் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதலையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான தொழிற்கூடம், இணையதள வசதி, கைபேசி செயலி, Cloud சேவைகள், ஆய்வக வசதிகள், சந்தைப்படுத்தல் வசதிகள் உள்ளிட்ட தேவையான உள்கட்டமைப்புகளை உருவாக்க புதுச்சேரி தொழில் துவங்கு நிதியாக ₹ 10 கோடி கார்பஸ் நிதி (Corpus Fund) அமைக்கப்படும்.

**78.** மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி (MSME), குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் உதவிபுரியும் குழு

(Council) ஒன்று தொழில்துறை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. குறு, சிறு தொழில் நிறுவனங்கள் மற்றும் அந்த நிறுவனங்களின் தயாரிப்புப் பொருட்களை வாங்குபவர்கள் இடையே பணப் பரிவர்த்தனைகளில் ஏற்படும் காலதாமதத்திற்கு தீர்வு காண்பது இக்கவுன்சிலின் நோக்கமாகும்.

**79.** புதுச்சேரியில் முதலீடுகளைக் கவரும் பொருட்டு தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு செப்டம்பர் 23 மற்றும் 24-ஆம் தேதிகளில் நடத்தப்படும்.

**தொழிலாளர் நலம்**

**80.** எனது அரசு அமைப்பு மற்றும் அமைப்புச் சாரா தொழிலாளர் நலத் திட்டங்களை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க உறுதி பூண்டுள்ளது. மத்திய அரசின் “பிரதான் மந்திரி ஸ்ரம் யோகி மந்தன் யோஜனா” (PMSYMY) திட்டத்தின்கீழ், 18 முதல் 40 வயது வரை உள்ள குறைந்த ஊதியம் பெறுபவர்கள் 60 வயது அடைந்தவுடன் மாதத்திற்கு ₹ 3,000 ஓய்வூதியம் பெறும் திட்டத்தை புதுச்சேரி கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர் நலவாரியத்தில் பதிவுசெய்த தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், குடும்பத்திற்கு தலா ஐந்து இலட்சம் வரை அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிறப்பு உயர்தர சிகிச்சைகள் பெறுவதற்கு

வழிவகுக்கும் மருத்துவ காப்பீடு “ஆயூஷ்மான் பாரத்” (PMJAY) திட்டம் புதுச்சேரி கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேட்டுப்பாளையத்தில் மாதிரி தொழிற் பயிற்சி நிலையம் மத்திய அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்படும்.

**81.** அரசினால் செயல்படுத்தப்படும் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்கள் தற்போதைய தேவைக்கேற்பவும், மேலும் வேலைவாய்ப்பிற்கு வழிவகுக்கவும் செய்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இதைக் கருத்தில் கொண்டு கைவினைப்பொருள் பயிற்சி, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் பயிற்சி, கட்டுமானப் பயிற்சி, மீன் பிடிப்பு மற்றும் பாதுகாப்புப் பயிற்சி, படகு பழுது பார்த்தல், ஆழ்கடல் நீச்சல் பயிற்சி, மீன் வளர்ப்பு, கடல்வாழ் உணவு பதப்படுத்துவதற்கான பயிற்சி போன்றவை மத்திய அரசின் “பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா” (PMKVY) திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும்.

**உள்ளாட்சி**

**82.** விரைவான நகரமயமாதல் மற்றும் மக்கள்தொகை பெருக்கம் ஆகியவை திடக்கழிவு பெருகுவதற்கு முக்கிய காரணிகளாக உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனவே, திடக்கழிவு மேலாண்மைக்கு புதிய தொழில்நுட்பங்கள் பின்பற்றப்படவேண்டியது அவசியமாகிறது.

**83.** ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை மற்றும் கட்டுமான கட்டட இடிப்பு கழிவுகள் திட்டங்களை சுற்றுச்சூழல் ஒழுங்குமுறைப்படி தகுந்த இடத்தில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் குப்பைகளை அகற்றும் பிரச்சனைகள் தீர்க்கப்படுவதோடு குப்பை இல்லா நகரமாக புதுச்சேரியை உருவாக்குவதற்கும் வழிவகுக்கப்படும்.

**84.** பொலிவுறு நகரத் (Smart City) திட்டத்தில், சின்னையாபுரம் பகுதியில் ₹ 18.03 கோடி செலவில் 6 தொகுப்புகளைக் கொண்ட 220 குடியிருப்பு வீடுகளின் கட்டுமானப் பணி நடைபெற்று வருகின்றன. மேலும், மழைக்காலங்களில் பிரதான வாய்க்கால்களில் நீர் தேங்கும் சூழ்நிலையை தவிர்க்கும் பொருட்டு வீட்டுவசதி வாரியத்திற்கு எதிரே சிறிய பாலம் அமைத்தல், எல்லைபிள்ளைச்சாவடியில் உள்ள குண்டு சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் மேட்டு வாய்க்காலுக்கான RCC சிறுபாலம் அமைத்தல், காமராஜ் சாலை சந்திப்பு முதல் வாணரப்பேட்டை நடை பாலம் இடையே அமைந்துள்ள உப்பார் வாய்க்காலை இருபுறமும் மேம்படுத்துதல் (Lining), மேட்டுவாய்க்காலுக்கு வடிகால் மற்றும் மேட்டுவாய்க்கால் குறுக்கே மூன்று சிறு பாலம் அமைத்தல் ஆகிய மழைநீர் வாய்க்கால் மேம்படுத்தும் பணிகள் ₹ 26.42 கோடி செலவில் நடப்பாண்டில் செய்து முடிக்கப்படும். இவற்றில் பல பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள பணிகள் விரைவில் துவங்கப்படும்.

**85.** புதுச்சேரி நகரத்தின் பெருமையை பறைசாற்றும் வகையில் பிரெஞ்சு கலாச்சாரத்தின் பாரம்பரிய கட்டடக்கலையின் வடிவமாகத் திகழும் கலவைக் கல்லூரி ₹ 4.39 கோடியிலும், வ.உ.சி. மேல்நிலைப் பள்ளி ₹ 5.85 கோடியிலும், பென்ஷனேட் பள்ளி ₹ 5.51 கோடி செலவிலும் கட்டடங்களின் பழமை மாறாமல் புனரமைக்கப்படும்.

**86.** வாகன நிறுத்துமிடப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக போக்குவரத்து மேலாண்மையின் ஒரு பகுதியாக நகரின் மையப் பகுதியில் வாகன நிறுத்துமிடம் அமைக்கப்படும். இதற்காக ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ள பழைய சிறை வளாகம், பழைய துறைமுகம் ஆகிய இரண்டு இடங்களில் ₹ 20 கோடி செலவில் பல அடுக்கு கார் நிறுத்துமிடம் அமைக்கும் பணி இந்த நிதியாண்டில் தொடங்கப்படும். ₹ 33.45 கோடி மதிப்பீட்டில் இரண்டு மின்மாற்றிகளை குறு மின் நிலையங்களாக மாற்றும் பணி நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

**87.** “ஜல்ஜீவன் மிஷன்” என்ற திட்டத்தின்கீழ் அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் தரமான மற்றும் தேவையான சுத்தமான குடிநீர் வழங்கப்படுகிறது. இந்த நிதியாண்டு இறுதிக்குள் குடிநீர் இணைப்பு அற்ற வீடுகளுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்கப்படும். பொலிவுறு நகரத் திட்டத்தின்கீழ் அனைத்து தெரு விளக்குகளையும் LED விளக்குகளாக மாற்றும் பணி இந்த ஆண்டு நிறைவடையும்.

**காவல்**

**88.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் காவல் துறையினர் தமது பணிகளைத் திறம்பட அர்ப்பணிப்பு உணர்வுடன் தொடர்ந்து மேற்கொள்வதால் புதுச்சேரி மாநிலம் அமைதியாகத் திகழ்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். கொரோனா வைரஸுக்கு எதிரான போரில் முன்களப்பணியாளர்களாக செயல்பட்ட காவல் துறையினருக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**89.** எனது அரசு சட்டம்–ஒழுங்கைச் செவ்வனே பராமரிக்க, காவல்துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த உறுதி பூண்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு புதுச்சேரி இலாசுப்பேட்டை, ரெட்டியார்பாளையம் ஆகிய இரண்டு இடங்களில் காவல் நிலையங்கள், கரிக்கலாம்பாக்கம் புறக்காவல் நிலையம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் மற்றும் காவலர் குடியிருப்புகளைப் புதுப்பிக்கும் பணிக்காகவும் ₹ 15 கோடி இந்த ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபோல், ₹ 2 கோடி செலவில் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) நிறுவுதல், ₹ 4 கோடி செலவில் காவல்துறைக்குப் புதிய வாகனங்கள் வாங்குதல், ₹ 1 கோடி மதிப்பில் ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் ₹ 1 கோடி செலவில் கணினிகள், பிரதி எடுக்கும் இயந்திரங்கள் (Photocopier) வாங்குதல் முதலிய

பல்வேறு செலவினங்களுக்காக மொத்தம் ₹ 12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. காவல் துறையினருக்கு சீருடைப் படியை (Uniform allowance) வழங்க எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இதற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ₹ 7.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**90.** பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக இணையவழிக் குற்றங்களைத் (Cyber crimes) தடுக்க, இணையப் பாதுகாப்புக் கருவிகள் (Cyber tools) கொள்முதல் செய்யப்படும். புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் சிறந்த முறையில் தகவல் தொடர்புக்காக அவசரகால மையங்கள் (ERSS Centres) அமைக்கும் பணி விரைவில் முடிவடையும். காவல்துறையில் உள்ள காலிப் பணியிடங்கள் நடப்பாண்டில் நிரப்பப்படும்.

**91.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 303.85 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**துறைமுகம்**

**92.** புதுச்சேரி துறைமுகம் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கக்கூடிய வணிக ரீதியிலான சரக்குகள் கையாள்வதற்குண்டான வசதிகளைக் கொண்டுள்ளது. எனது அரசு சென்னை துறைமுக கழகத்துடன் இணைந்து புதுச்சேரி துறைமுகத்தில் சரக்குகள் கையாளும் பணிகளை புனரமைக்க ஆர்வமாக உள்ளது. இந்தத் திட்டத்தை

நடைமுறைப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும். "சாகர்மாலா" திட்டத்தின்கீழ் பெரிய வாய்க்காலும் துறைமுகக் கால்வாயும் இணையும் இடத்திற்கு அருகே வாய்க்காலின் குறுக்கே Barrier இந்த ஆண்டு அமைக்கப்படும். பொலிவுறு நகரத் திட்டத்தின் நிதியுதவியுடன் பழைய துறைமுகம் பகுதியில் பல அடுக்கு வாகன நிறுத்துமிடத்துடன் கூடிய நகர்புற பொழுதுபோக்கு கிராமம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதிய மற்றும் பழைய துறைமுகங்களின் மேம்பாட்டிற்காக ஒரு முதன்மை திட்டம் (Master Plan) தயாரிக்கப்பட்டு அதற்கான மேல்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**பொதுப் பணிகள்**

**93.** மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு, உள்கட்டமைப்பு மேம்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் அனைத்து நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெறுவதுடன் சாலை வசதிகளும் உடையதாக விளங்குகின்றன என்பது மகிழ்சியளிப்பதாக உள்ளது. குடிநீர் வழங்கலை மேலும் அதிகரிக்க புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில் முறையே ₹ 38.42 கோடி மற்றும் ₹ 14.50 கோடி செலவில் புதிய குடிநீர்த் திட்டங்கள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும்.

**94.** புதுச்சேரி பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி, திருக்கனூர் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் காராமணிக்குப்பம் ஜீவானந்தம் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் கட்டடம், வகுப்பறைகள் மற்றும் இலாசுப்பேட்டை காவல் நிலையத்திற்கு புதியதாக மூன்று மாடி கட்டடம் ஆகியவை ₹ 16 கோடி செலவில் கட்டப்படும். காரைக்கால் அம்பகரத்தூர் ஆரம்ப சுகாதார மையத்தை மேம்படுத்துதல் மற்றும் தேனூர் சமுதாய நல மையத்தில் புற நோயாளிகள் பிரிவு கட்டடம் கட்டுதல் ஆகியவை ₹ 2.17 கோடி செலவில் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும்.

**95.** சாலை மற்றும் பாலங்கள் கட்டுமானப்பணிகளின்கீழ் (i) இலாசுப்பேட்டை பகுதியில் L மற்றும் U வடிகால் அமைத்தல்; (ii) மதகடிப்பட்டில் சாலைகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்; (iii) ஆரியப்பாளையம், சங்கராபரணி ஆற்றின் குறுக்கே புதிய மேம்பாலம் கட்டுதல் மற்றும் புதுச்சேரி–வில்லியனூர் தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்; (iv) கிருமாம்பாக்கம் முதல் வம்புபேட் RC-21 வரை சாலைகளை மேம்படுத்துதல்; (v) ஏம்பலம் சாலையில் தற்போதுள்ள ஒற்றை வழிப்பாலத்தை இரட்டை வழிப்பாலமாக மறுகட்டுமானம் செய்தல் ஆகிய 13 முக்கிய பணிகள் ₹ 133.51 கோடி செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

**96.** மாஹே பிராந்தியம் பள்ளூரில் சமுதாய நலக் கூடத்திற்கு புதிய கட்டடம், கடலோர காவல் நிலையம், VIP Suite மற்றும் கூடுதல் விருந்தினர் இல்லம் ஆகியவை ₹ 19.65 கோடி செலவில் இந்த ஆண்டு கட்டப்படும்.

**97.** ஏனாம் பிராந்தியத்தில், இந்திய விளையாட்டு வீரர்களுக்காகத் தங்கும் விடுதி மற்றும் ANM பள்ளிக்கான கட்டடம் ₹ 7.41 கோடி செலவில் கட்டப்படும். புதுச்சேரியில் கேளோ இந்தியா (Khelo India) திட்டத்தின்கீழ் ஒலிம்பிக் தரத்தில் ₹ 5 கோடி மதிப்பீட்டில் நீச்சல் குளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இது இந்த ஆண்டில் கட்டி முடிக்கப்படும். ஏனாம் பிராந்தியத்தில் 400 மீட்டர் ஓட்டப்பந்தய பாதை, கைப்பந்து மற்றும் கால்பந்து திடல் ₹ 4.02 கோடி மதிப்பீட்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**98.** “பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா” (PMGSY) திட்டத்தின்கீழ் ₹ 29.97 கோடி செலவில் புதுச்சேரி பிராந்தியத்தில் 60.255 கிலோமீட்டர் நீளத்திற்கும், ₹ 3.75 கோடி செலவில் காரைக்கால் பிராந்தியத்தில் 10.41 கிலோமீட்டர் நீளத்திற்கும் சர்வதேச தரத்தில் சாலைகள் அமைக்கப்படும். பாகூரில் புதிய பேருந்து நிலையம் ₹ 2 கோடி செலவில் அமைக்கப்படும்.

**99.** காரைக்கால் பிராந்தியம் திருநள்ளாற்றில் ₹ 4 கோடி செலவில் நான்கு தேரோடும் வீதிகளை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. காரைக்காலில் உள்ள பல்வேறு

சாலைகளை ₹ 19.20 கோடி செலவில் மேம்படுத்துதல் மற்றும் அத்திப்படுகை அரசலாற்றின் குறுக்கே ₹ 4.50 கோடி செலவில் பாலம் கட்டும் பணிகள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட உள்ளன.

**100.** மாஹே பிராந்தியத்தில் மாஹே ஆற்றின் குறுக்கே, ஒரு பாலமும் மற்றும் மஞ்சக்கல் முதல் கல்லாயி வரை ஒரு தடுப்பணை மற்றும் பாலமும் ₹ 38 கோடி செலவில் இரண்டு பாலங்கள் கட்டப்படும். ஏனாம் பிராந்தியத்தில் ₹ 2 கோடி செலவில் பிரெஞ்சு வாய்க்காலை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

**101.** புதுச்சேரி அரிக்கமேடு, நல்லவாடு மற்றும் பெரியகாலாப்பட்டு கிராமத்தில் மீன்தரையிறக்கும் மையங்கள் (Fish Landing Centre) ₹ 50 கோடி செலவில் மேம்படுத்தப்படும். ₹ 52.90 கோடி செலவில் நடப்பாண்டில் காரைக்கால் மீன்பிடித் துறைமுகம் மேம்படுத்தப்படும்.

**102.** புதுச்சேரி மற்றும் காரைக்கால் பிராந்தியங்களில் பல்வேறு நீர்ப்பாசன திட்டங்கள் முறையே ₹ 53.23 கோடி மற்றும் ₹ 23.73 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

**வருவாய்**

**103.** கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் இக்கட்டான பணியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். மேலும், இந்த உன்னத பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ள அனைத்து வருவாய்த் துறை பணியாளர்களும் பாராட்டுதலுக்குரியவர்கள் ஆவர். இந்தக் கடினமான பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து வருவாய் துறையினருக்கும் எனது மனமார்ந்த நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனது அரசு கொரோனா நோய்த் தொற்று பரவுதலின் தன்மையை அடிக்கடி ஆராய்ந்து நோய் தொற்றுதலை கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

**104.** புதுச்சேரி பேரிடர் மேலாண்மை அமைப்பை வலுப்படுத்த, “ஆப்தா மித்ரா” (Aapda Mitra) திட்டத்தின்கீழ், 500 சமூக தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி சமூக பாதுகாப்பு தன்னார்வலர்கள் (Civil Defence Volunteers) அமைப்பு நிறுவப்பட்டு செயல்படுத்தப்படும். பட்டா மாற்றுதலில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு எனது அரசு இணையவழி மூலம் தானியங்கி பட்டா பெயர் மாற்றத் திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளது. இதற்கு தேவையான

மென்பொருள் புதுச்சேரி தேசிய தகவலியல் மையம் (NIC) மூலம் உருவாக்கப்பட்டு விரைவில் நடைமுறைக்கு வரும். இது பதிவுத்துறை ஒருங்கிணைப்புடன் நடைமுறைப்படுத்தப்படும்.

## அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்

**105.** உலக வங்கி நிதி உதவியுடன் மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தில் செயல்படுத்தப்படும் “கடலோர மற்றும் பெருங்கடல் வள ஆதாரங்களை மேம்படுத்துதல்” [ Enhancing Coastal and Ocean Resource Efficiency (ENCORE) ] திட்டத்தின்கீழ் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மை (Integrated Coastal Zone Management) திட்டத்தை செயல்படுத்த முதற்கட்ட பணிகள் புதுச்சேரி சுற்றுச்சூழல் துறையால் துவங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நோக்கம் பின்வருமாறு:

(i) மீனவர்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் கடலோரப் பகுதிகளில் வசிக்கும் இதர சமூகத்தினரின் வாழ்வாதாரப் பாதுகாப்பை உறுதிசெய்தல்;

(ii) கடலோர பகுதிகள், அதன் தனித்துவமான சுற்றுப்புறச் சூழல், கடலில் வாழும் பல்லுயிரினங்கள், மற்றும் கடல் பகுதியைப் பாதுகாத்தல்;

(iii) கடலோரப் பகுதிகளில் ஏற்படும் இயற்கை பேரிடர்கள், புவி வெப்பமடைதல் காரணமாக கடல் மட்டம் உயருதல் ஆகியனவற்றை கருத்தில் கொண்டு அறிவியல் ரீதியாக, நிலையான வளர்ச்சியை ஊக்குவிக்கும் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

**106.** ENCORE திட்டங்களை ஒருங்கிணைக்க புதுச்சேரியின், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அலுவலகத்தில் "புதுச்சேரி ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மை சங்கம்" (Puducherry Integrated Coastal Zone Management Society) என்ற பிரத்தியேக திட்ட மேலாண்மைப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது 50 விழுக்காடு உலக வங்கி உதவி (₹ 55.95 கோடி), 40 விழுக்காடு மத்திய அரசு உதவி (₹ 44.76 கோடி), 10 விழுக்காடு மாநில நிதி (₹ 11.19 கோடி) என்ற விகிதத்தில் ₹ 111.90 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட வடிவமைக்கப் பட்டுள்ளது.

**107.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பினை ஒருமுறை பயன்படுத்தும் நெகிழி அற்ற பகுதியாக விளங்க பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, காந்தி ஜெயந்தி அன்று ஒருமுறை பயன்படுத்தும் நெகிழி இல்லா மாதிரி கொம்யூனாக பாகூர் பகுதி அறிவிக்கப்படும்.

**நகர மற்றும் கிராமத் திட்டமிடல்**

**108.** குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ₹ 53.30 இலட்சம் செலவில் இலாசுப்பேட்டை நெசவாளர் நகரில் L வடிவ கழிவு நீர் வாய்க்கால் மற்றும் சிமெண்ட் சாலைகள் அமைக்கப்படும். ஏனாம் குரியம்பேட்டாவில் ₹ 44.25 இலட்சம் மதிப்பீட்டில் பாதுகாப்பு சுவருடன் பக்க வடிகால்கள் அமைத்தல் மற்றும் தற்போதுள்ள வடிகால்களை மேம்படுத்துதல் ஆகிய கட்டுமானப் பணிகள் துவங்கப்படும்.

**109.** பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு வீடு கட்டும் திட்டத்தின்கீழ், வீடுகள் கட்டி முடிப்பதற்காக புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில் உள்ள 821 பயனாளிகளுக்கு 2வது மற்றும் 3வது தவணையாக ₹ 7.27 கோடி வழங்கப்படும். பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின்கீழ், 3,800 வீடுகளின் கட்டுமானம் பல்வேறு நிலைகளில் உள்ளது. 2022க்குள் அனைவருக்கும் வீடு என்ற திட்ட இலக்கை புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் அடையும் நோக்கில் அனுமதி அளிக்கப்பட்ட வீடுகளைக் கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**110.** பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு வீடு கட்டும் திட்டத்தையும் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தினையும் இணைத்து தற்போது கட்டுமான நிலையில் உள்ள 4,621 வீடுகளின் பயனாளிகளுக்கும் மற்றும் புதிய பயனாளிகளுக்கும் அதிகபட்சமாக ₹ 3,50,000 நிதியுதவி வழங்கப்படும்.

**111.** காமராஜர் கல்வீடு கட்டும் திட்டத்தின்கீழ், ஏற்கனவே கடன் பெற்று வீட்டை முழுவதுமாகக் கட்டி முடிக்க இயலாதவர்கள் கடன் அசல் தொகையை திருப்பி செலுத்தும் பட்சத்தில் அவர்களுக்கு வீட்டின் பத்திரம் திருப்பி தரப்படும். கடன் பெற்று ஆனால் வீடு கட்டும் வேலைகளை இன்னும் துவக்காதவர்கள் அரசால் நிர்ணயிக்கப்படும் வட்டியுடன் அசலைத் திருப்பி செலுத்தும்பட்சத்தில் அவர்களுக்கு பத்திரம் திருப்பித் தரப்படும்.

**112.** அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் விதிகளைமீறி கட்டப்பட்டுள்ள கட்டுமானங்களை ஒழுங்குமுறைப்படுத்தும் பொருட்டு எனது அரசு, நகர மற்றும் கிராம அமைப்புச் சட்டம் 1969, நகர மற்றும் கிராம அமைப்பு விதிகள் 1975 மற்றும் கட்டட விதிகள் மற்றும் மண்டல ஒழுங்குமுறை விதிகளில் தேவையான திருத்தங்கள் செய்து இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படும். சிறந்த முறையில் நகர மற்றும் கிராம திட்டமிடல் பணிகளை மேற்கொள்ள புதுச்சேரி நகர அமைப்புக் குழுமத்தில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும்.

**சுற்றுலா**

**113.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பானது கடற்கரைகள், புகழ்மிக்க கோயில்கள், கைவினைப் பொருட்கள், கழிமுகப் பகுதிகள், பாரம்பரிய கட்டடங்கள் முதலியவற்றிற்கு புகழ்பெற்ற நகரமாகும்.

புதுச்சேரிக்கு உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. புதுச்சேரியானது அண்டை மாநிலத்திலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு, வார இறுதி நாட்களில் மிகவும் விரும்பத்தக்கத் தங்குமிடமாகத் திகழ்கிறது.

**114.** முருங்கப்பாக்கம் பகுதி முக்கிய சுற்றுலா மண்டலமாக வளர்ந்து வருகிறது. எனது அரசு கலை மற்றும் கைவினை கிராமம் அருகில் கூடுதல் சுற்றுலாக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அரிக்கன்மேடு அருங்காட்சியகம் மற்றும் கருத்தரங்கு மையம், பிரெஞ்சு-தமிழ் கிராமம் மற்றும் அதனை ஒட்டிய பாரம்பரிய கிராம மேம்பாட்டுத் திட்டப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. புதியதாக உருவாக்கப்பட்ட அனைத்து சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகளும் தனியார் பங்களிப்போடு சிறப்பாக பராமரிக்கப்படும்.

**115.** ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் வார இறுதி நாட்களில் சுற்றுலாப் பயணிகள் விரும்பி வருகை தரும் இடமாக புதுச்சேரி திகழ்கிறது. வார இறுதி நாட்கள் மட்டுமின்றி புதுச்சேரிக்கு வாரம் முழுவதும் சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் விதத்தில் சுற்றுலாப் உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும். பழைய சாராய வடிசாலை இடத்தில் கட்டப்பட்டுவரும் கருத்தரங்கு கூடத்துடன் கூடிய பண்பாட்டு வளாகம் மற்றும் துறைமுக வளாகத்தில் உள்ள பழைய கிடங்குகளை மாநாட்டு கூடங்களாக

புதுப்பித்தல் ஆகிய பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. இது வணிக சுற்றுலாவை (Business Tourism) ஈர்த்து இவ்வாட்சிப்பரப்பின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

**116.** தனியார் முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும் நோக்கில், சுற்றுலா தொழில் சட்டம் (Tourism Trade Act) உருவாக்கப்படும். தங்குமிடங்கள், உறைவிடம் மற்றும் சிற்றுண்டி நிறுவனங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சுற்றுலாப் பயணிகளின் நலனுக்காக கைபேசி செயலி (Mobile App), இணைய வழி சுற்றுலா தகவல் வசதி (Online Tourist Information System) ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன. பல்வேறு கருத்தின் அடிப்படையிலான சுற்றுலாக்களான இ-பைக் சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா, ஆன்மீகச் சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, சாகச சுற்றுலா, புதுச்சேரியின் கடற்கரைகள், நகரத்தின் பேஷன் கடைகள் (Boutiques) மற்றும் உணவகங்கள், புதுச்சேரி மாநிலத்தின் காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் சுற்றுலா போன்ற சுற்றுலாக்கள் தனியார் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும். வழக்கமான சுற்றுலா நிகழ்ச்சிகள் மற்றும் விழாக்களோடுகூட சாகச விளையாட்டுத் திருவிழா, உணவுத் திருவிழா மற்றும் கடற்கரைத் திருவிழாக்கள் கொரோனா நோய்ப்பரவல் கட்டுப்பாட்டு விதிகளை பின்பற்றி நடத்தப்படும். நீர் விளையாட்டுகள் மேம்படுத்தப்படும்.

**117.** திருநள்ளாற்றில், ஆன்மீகப் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. ஆன்மீக சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி, கோவில்பத்து அரசு சுற்றுலா விடுதி புனரமைக்கப்பட்டு கூடுதல் அறைகள் கட்டப்படும். காரைக்கால் கடற்கரையைச் செவ்வனே மேம்படுத்தத் தேவையான புதிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஏனாம் கோபுரத்தை சுற்றியுள்ள பகுதிகளில் பொழுதுபோக்குப் பூங்கா மேம்பாட்டு பணிகள் நிறைவு செய்யப்பட்டு இரண்டாம் கட்ட மேம்பாட்டு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். தனியார் நீர் விளையாட்டு நிறுவனங்கள் மாஹே மய்யாழி ஆற்றில் படகுப் பயணம் / படகு இல்லம் போன்றவற்றை இயக்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். அரசு இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து, உரிய முடிவு விரைவில் எடுக்கும்.

**118.** புதுச்சேரியில் பாய்மரப் படகுப் பயணத் தளம் மற்றும் மணப்பட்டு பகுதியில் பொழுதுபோக்கு பூங்கா ஆகியவற்றை நிதி ஆயோக்கின் (NITI AAYOG) தொழில்நுட்ப நிபுணர் குழுவின் ஆலோசனைப்படி உருவாக்கிட முன்னுரிமை அளிக்கப்படும். பாய்மரப்படகுத் தளம் அமைப்பதற்குத் தேவையான நிலம் இந்த ஆண்டில் கண்டறியப்பட்டு இத்திட்டம் விரைந்து செயல்படுத்தப்படும். தனியார் சுற்றுலா முதலீட்டாளர்கள், சுற்றுலாத் தொழில் முனைவோர் மற்றும் இளைஞர்களுக்கு சுற்றுலா சார்ந்த வணிகத்தில் வேலைவாய்ப்பு

கிடைத்திட புதுச்சேரி சுற்றுலா தொழிலுக்கு சுற்றுலா தொழிற்சாலை தகுதி நிலை (Industrial Status) பெற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

**போக்குவரத்து**

**119.** கொரோனா நோய்த்தொற்று பரவல் போக்குவரத்து துறையையும் வெகுவாக பாதித்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனினும், கொரோனா தொற்றுக் கட்டுப்பாடுகள் தற்போது தளர்த்தப்பட்டுள்ளதால் பொதுப்போக்குவரத்து கிட்டத்தட்ட இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. பெண்கள் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கும் நிர்பயா திட்டத்தின் மூலம் ₹ 4.60 கோடி செலவில் வாகன இயக்க கண்காணிப்பு மையம் போக்குவரத்துத் துறை அலுவலத்தில் இந்த ஆண்டு நிறுவப்படும். அரசுக்கு நிதிச்சுமை இருப்பினும், புதுச்சேரி சாலைப் போக்குவரத்துக் கழகம் தொடர்ந்து சீராக இயங்குவதற்கு ₹ 25.85 கோடி 2021-22ல் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்**

**120.** எனது அரசின் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் அனைத்து தரப்பினரின் குறிப்பாக, சமூகத்தில் பின் தங்கிய மற்றும் நலிவடைந்த பிரிவினரின் வளர்ச்சிக்கு உதவும்

வகையில் வடிவமைக்கப்படும் என்று இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உறுதியளிக்கிறேன். புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவர்களுக்குத் தேவையான திட்டங்களுக்குப் போதுமான அளவு நிதியை ஒதுக்குதல், பல்வேறு அரசுத் திட்டங்களின்கீழ் மானியம் வழங்குதல், வேலைவாய்ப்பில் இடஒதுக்கீட்டை வழங்குதல் போன்ற பல்வேறு இலக்குடன் கூடிய திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்படுகின்றன.

**121.** ஆதிதிராவிடர் மணப்பெண்ணின் பெற்றோருக்குத் தற்போது வழங்கப்படும் திருமண நிதி உதவி ₹ 75,000லிருந்து ஒரு இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், கிராமப்புறங்களில் வசிக்கும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இன மக்கள் பல்வேறு நலத்திட்டங்களின் பயன்களைப் பெறும் பொருட்டு, புதுச்சேரியின் பல முக்கிய கிராமப்புறங்களை இணைக்கும் வில்லியனூரில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கிளை அலுவலகம் ஒன்றை அமைக்க எனது அரசு உத்தேசித்துள்ளது. நடப்பாண்டில் பழங்குடியின மாணவர்களுக்காகத் தங்கும் விடுதி (Hostel) ஒன்றை அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினரின் கல்வி உதவித் திட்டத்தின்கீழ், மாணவர்கள் உயர்கல்வி கற்கும் விதத்தில் கல்லூரிப் படிப்புகள்

அனைத்திற்கும் இலவசக் கல்வி வழங்கும் திட்டம் நடப்பாண்டு முதல் திறம்பட செயல்படுத்தப்படும். PADCO மூலம் கல்விக்கடன் பெற்ற மாணவர்கள் திருப்பி செலுத்தவேண்டிய கடன் தொகை தள்ளுபடி செய்யப்படும்.

**122.** இந்த ஆண்டு சிறப்புக் கூறு திட்ட நிதியாக (SCP) ₹ 396 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**123.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 165.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்

**124.** இவ்வாட்சிப்பரப்பின் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக அடுத்தடுத்து வரும் அரசுகள் தொடர்ந்து பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. இதேபோல், எனது அரசும் தற்போது நடைமுறையில் உள்ள அனைத்து நலத் திட்டங்களையும் தொடர்ந்து செயல்படுத்தும். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மாணவர்களுக்குத் தங்கும் விடுதி வசதிகள் கல்வி உதவித்தொகை, குறுநிதி கடன் வசதி (Micro finance) மற்றும் கல்விக் கடன் போன்ற நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. புதுச்சேரி, கோர்க்காடு வருவாய் கிராமத்தில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு புதிய உண்டு உறைவிடப் பள்ளி ஒன்றையும் மற்றும் ஏம்பலத்தில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள்

பயன்பெறும் வகையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவிகளுக்குப் புதிய தங்கும் விடுதி ஒன்றையும் கட்டுவதற்கு எனது அரசு உத்தேசித்துள்ளது.

**சமூக நலம்**

**125.** எனது அரசு மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காகத் தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களான அரசுப் பேருந்தில் பயணம் செய்ய இலவசப் பயண அட்டை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, பத்தாம் வகுப்புக்கு முந்தைய மற்றும் பிந்தைய உதவித்தொகை, எரிபொருள் மானியம், மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டிகள், போக்குவரத்து பயணப்படி, ஈமச்சடங்கிற்காக மாற்றுத் திறனாளிகளின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கு நிதி உதவி அளித்தல் முதலிய பல்வேறு நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தும். மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலம் மற்றும் பாதுகாப்பு, மாற்றுத்திறனாளிகள், மனநலம் குன்றியோர், முதியோர் மற்றும் நலிந்த பிரிவினருக்காக தொண்டாற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கப்படும்.

**126.** புதுச்சேரி அரியாங்குப்பம் மற்றும் காரைக்கால் பகுதியில் இயங்குவது போல, புதுச்சேரி வில்லியனூர் பகுதியிலும் “பாதுகாப்பு மற்றும் பொழுதுபோக்கு மையம்” (Day Care Centre) ஒன்றை மூத்த குடிமக்களின் நலனுக்காக நடப்பு நிதியாண்டில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**127.** “பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலம் மற்றும் பராமரிப்புச் சட்டம் 2007”ன்படி, இவ்வாட்சிப்பரப்பில் “புதுச்சேரி பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலம் மற்றும் பராமரிப்பு விதிகள் 2011“ வெளியிடப்பட்டுள்ளன. சட்ட உதவி தேவைப்படும் மூத்த குடிமக்களுக்காக புதுச்சேரி முதியோர் பராமரிப்புச் சங்கம் (PONCARE) ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரை இலவச சட்ட ஆலோசகராக நியமித்துள்ளது. இந்தச் சங்கத்தில் பிரதிவாரம் புதன்கிழமை மாலை 3.30 மணி முதல் 5.45 மணி வரை சட்ட ஆலோசனைகளைப் பெறலாம்.

**மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு**

**128.** ஒரு நாட்டின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்கு, பெண்கள் மற்றும் குழந்தைகளின் சமூக, பொருளாதார, சுகாதார, மற்றும் ஊட்டச்சத்து நிலையில் முன்னேற்றம் அடையச் செய்வது ஒரு அரசின் தலையாய கடமையாகும். பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனைப் பேணுவதற்காகத் தற்போது நடைமுறையில் உள்ள நலத் திட்டங்கள் / பயன்களை எனது அரசு தொடர்ந்து செயல்படுத்தும். மேலும், பெண்கள் குறிப்பாக கிராமப்புற பெண்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் பொருட்டு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய எனது அரசு அனைத்து சாத்தியக் கூறுகளையும் ஆராயும். பெண்கள் எவ்வித வன்முறையால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவர்களுக்கு ஒருங்கிணைந்த ஆதரவு மற்றும் உதவியினை வழங்கி ஒரு குடைக்குள் கொண்டு வருவதே மத்திய அரசு திட்டமான

“ஒருங்கிணைந்த சேவை மையம்” (One Stop Centre) திட்டமாகும். காரைக்கால், மாஹே, மற்றும் ஏனாம் பகுதிகளில் தலா ஒன்று என மூன்று புதிய ஒருங்கிணைந்த சேவை மையங்கள் இந்த ஆண்டு கட்டி முடிக்கப்படும். காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் ஒருங்கிணைந்த சேவை மையம் கட்டுவதற்கான நிலம் கண்டறியப்பட்டுள்ளது. காரைக்கால் மாவட்டத்தில் கட்டுமானப் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுவிட்டன. இது விரைவில் கட்டிமுடிக்கப்படும். ஏனாம் பகுதியில் ஒருங்கிணைந்த சேவை மையம் கட்டுவதற்கான நிலத்தை அரசுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதன் கட்டுமானம் இந்த ஆண்டிலேயே முடிக்கப்படும்.

**129.** “181-மகளிர் உதவி எண்” வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி 24 மணி நேரமும் உடனடி மற்றும் அவசரகால தீர்வை வழங்கும் நோக்கில் செயல்பட்டு வருகிறது. மேலும், பெண்கள் நலனுக்காக நாடு முழுவதிலும் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றிய தகவல்களை இந்த ஒரே சீரான எண் மூலம் அறியமுடிகிறது. வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஒருங்கிணைந்த ஆதரவினையும் மற்றும் உதவியினையும் ஒரே குடையின்கீழ் வழங்கும் விதமாக மத்திய அரசின் நிதி உதவியுடன் புதுச்சேரியில் “மகளிர் உதவி எண்” செயல்படுத்தப்படும்.

**130.** ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் திட்டத்தின்கீழ், குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்கும் மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டைக் களைவதற்கும் அங்கன்வாடி மையங்களில் பதிவுசெய்யப்பட்ட குழந்தைகளுக்கு வாரத்திற்கு இரண்டு முட்டைகள் கூடுதலாக வழங்கப்படும். அங்கன்வாடி மையங்களில் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு கூடுதல் துணை ஊட்டச்சத்து வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் அங்கன்வாடி மையங்களில் பதிந்துள்ள கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு மகப்பேறுக்கு முந்தைய ஊட்டச்சத்து பெட்டகம் (Prenatal Nutrition Kit) மற்றும் மகப்பேறுக்கு பிந்தைய குழந்தை வளர்ப்புப் பெட்டகம் (Postnatal Hygenic Kit) முறையே ₹ 4,000 மற்றும் ₹ 1,000 மதிப்பில் இந்த ஆண்டு வழங்கப்படும்.

**131.** மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறைக்கு 2021-22ஆம் ஆண்டிற்கு ₹ 562.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**132.** எங்களது அரசு மக்களின் தேவைகளைக் கண்டறிந்து முனைப்புடன் நிறைவேற்றும் என்று உறுதியளித்து எனது உரையை முடிக்க விரும்புகிறேன். நிதித் தட்டுப்பாடு இருக்கும் பட்சத்திலும், வறுமை ஒழிப்பு, கல்வி, சுகாதாரம், ஏழைகளுக்கு

வீட்டுவசதி, நீர்ப்பாசனத்தில் நீர்வள ஆதாரங்கள் மேலாண்மை, ஆதிதிராவிடர், பழங்குடியினர், மீனவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் சமூக–பொருளாதார மேம்பாடு ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்க நான் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் முயற்சித்துள்ளேன். ஏற்கனவே கூறியதுபோல், காவல் துறையை வலுப்படுத்தி, குற்றங்களைத் தடுத்து, புதுச்சேரி அமைதியாக திகழ்வதற்காகக் காவல் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**133.** தற்போது நிலவிவரும் பெட்ரோல் விலை ஏற்றத்தின் தாக்கத்தை கருத்தில்கொண்டு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பெட்ரோல் மீதான VAT வரி 3 விழுக்காடு புதுச்சேரி மற்றும் காரைக்கால் பிராந்தியத்தில் உடனடியாக குறைக்கப்படும் என்பதை இத்தருணத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் ஒரு லிட்டருக்கு இரண்டு ரூபாய் நாற்பத்து மூன்று காசுகள் விலை குறையும்.

**134.** கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயப் பயிர்க் கடன் பெற்று திருப்பி செலுத்தமுடியாத நிலையில் பல விவசாயிகள் உள்ளனர், இதைக் கருத்தில் கொண்டு, கூட்டுறவு வங்கிகளில் விவசாயப் பயிர்க் கடன் பெற்று நிலுவை வைத்திருக்கும் விவசாயிகளின் கடன் தொகை தள்ளுபடி செய்யப்படுகிறது.

**135.** நட்டத்தில் இயங்கும் பல பொதுத்துறை நிறுவனங்கள், தன்னாட்சி அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகள் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்கள் / தொழிலாளர்களின் சிரமத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு இரண்டு மாத ஊதிய நிலுவைத் தொகை உடனடியாக வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

**136.** கொரோனா பெருந்தொற்றின் காரணமாக தற்போது பொருளாதார மந்தநிலை நிலவினாலும், வரும் மாதங்களில் புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் பொருளாதாரம் வளர்ச்சியை நோக்கிச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனது அரசு இந்த வரவு–செலவுத் திட்டத்தை தயாரிக்கும்போது, கடன் தாங்குதன்மை (Debt Sustainability) மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நிதிநிலைக் குறியீடுகளை பின்பற்றி நிதி நிலைமையை முறையாக பராமரித்தலை உறுதிசெய்துள்ளது. அதே சமயம், சமுதாயத்தின் ஏழை மற்றும் நலிவடைந்த பிரிவினருக்காகத் தற்போது நடைமுறையில் உள்ள நலத்திட்டங்களுக்கு போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் சில புதிய நலத்திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**137.** எனது அரசு பொருளாதாரத்தை விரைவாக மீட்கத் தேவையான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை தொடர்ந்து எடுக்கும். இதனால் புதுச்சேரி மாநிலத்தின் நிதிப் பற்றாக்குறையை குறைத்து நிதிநிலை மேம்பட வழிவகுக்கும்.

**138.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021-22ஆம் ஆண்டுக்கான இந்த மக்கள் நலன் சார்ந்த வரவு-செலவுத் திட்டத்தை இந்த மாண்புமிகு அவையின் முன் சமர்ப்பித்துள்ளேன். இந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு மதிப்புமிகு பேரவை உறுப்பினர்களின் மேலான ஆதரவை நான் கோருகின்றேன்.

**வாழ்க பாரதம் !**

**வெல்க புதுச்சேரி !**

**நன்றி ! வணக்கம் !**

# தடுப்பூசி போட்டுக்கொள்வோம்!
# கொரோனாவை வெல்வோம்!!

அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி - 605 009.